# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 03 புதன்கிழமை 19.11.2025 கதிர் 375







# கோப்பாயில் மாவீரர் நினைவேந்தலுக்கான ஏற்பாடுகள் தீவிரம்



கோப்பாய், நவ. 19

மாவீரர் வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில், கோப்பாய் மாவீரர் துயிலுள் இல்லப் பகுதியில் மாவீரர் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளமையால், எதிரே உள்ள தனியார் காணிக்குள் நினைவேந்தல் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# ஜனாதிபதியைச் சந்தித்த தமிழரசின் உறுப்பினர்கள்

## இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்து



கொழும்பு, நவ. 19

அண்மையில் திருகோணமலையில் இடம்பெற்ற சம்பவத்தைச் சுட்டிக்காட்டி இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை உறுதி செய்வதன் அவசியத்தை ஜனாதிபதி அநுரகுமாரதிஸ ாநாயக்காவிடம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் எடுத்துரைத்தனர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள் இன்று புதன்கிழமை பிற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினர். குறிப்பாக அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருடம் நிறைவடைந்துள்ள நிலையில், இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புக் குறித்து தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க பதவியேற்று ஒரு வருட நிறைவில் தமிழரசுக் கட்சி கடிதமொன்றை எழுதியிருந்தது. இந்த நிலையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கத்தின் தலைமையில் நாடாளுமன்றம் அமையப்பெற்று ஒரு வருடத்தின் பின்தான் இன்றைய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முதலாவதாக தெரிவித்த விடயம், புதிய அரசியலமைப்பு ஒன்று உருவாக்கப்படும் அதற்கான பேச்சுவார்த்தைகளை அடிப்படையாக வைத்து புதிய அரசமைப்பு துரிதமாக நடைமுறைக்கு வரும் என்பதே.

7



# ஞானசாரின் ஆட்டத்துக்கு அரசு இடமளிக்கக்கூடாது!

## சாணக்கியன் எம்.பி. இடித்துரைப்பு

கொழும்பு, நவ. 19

ஞானசார தேரரின் இனத்துவேஷ செயற்பாடுகளுக்குத் தேசிய மக்கள் சக்தி அரசு இடமளிக்கக் கூடாது என்று

7

# இந்த வருடம் இதுவரை 57 பேர் சுட்டுக்கொலை



கொழும்பு, நவ. 19

இலங்கையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள்

7

# காணி விடுவிப்புக்கு எதிராகச் சஜித் அணி போர்க்கொடி



கொழும்பு, நவ. 19

வடக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை ஒருபோதும் விடுவிக்கக் கூடாது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

"தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளால் தேசியப் பாதுகாப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தேசியப் பாதுகாப்பு தொடர்பாக அரசாங்கம் பொறுப்பின்றிச் செயற்படுகின்றது.

30 ஆண்டு கால போரினால் அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டார்கள். போர் முடிவடைந்து விட்டது என்று குறிப்பிட முடியாது.

எதிர்காலத்தில் போர் ஒன்று தோற்றம் பெறலாம். ஆகவே, அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியம்.

வடக்கு மாகாணம் தேசிய பாதுகாப்பின் பிரதான கேந்திர மையமாக உள்ளது .

வடக்கில் காணிப் பிரச்சினை காணப்படுகின்றது. தனிப்பட்ட பாதுகாப்பை விட, தேசிய பாதுகாப்பை கருத்தில்

7

# பட்டம் குறித்த குற்றச்சாட்டுகள்: “முழுவதும் பொய்” என்கிறார் நாமல்

கொழும்பு, நவ.19

தனது பட்டப்படிப்பு தொடர்பாக வெளியாகும் செய்திகள் முற்றிலும் பொய்யானவை என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த ‘பி அறிக்கை’ மூலம் மேற்கொள்ளப்படும் விசாரணையின் முடிவுகள் இதுவரை வெளியிடப்படாத நிலையில், இவ்வாறான அவதூறுகளுக்குரிய பதில்களை 21ஆம் திகதி நுகேகொட பேரணியில் நாடு முழுவதும் காண முடியும் என்று நாமல் ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

“இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சில வாரங்களிலேயே நீதிமன்றத்தில் ‘பி அறிக்கை’ ஒன்றைத் தாக்கல் செய்து எனது பட்டப்படிப்பு குறித்து விசாரிக்க அனுமதி பெற்றது. அதன் பிறகு மாதக்கணக்கில் இது குறித்து விசாரணைகள் நடந்து வருகின்றன. இன்று வரை நீதிமன்றத்தில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. ஆனால் இணையத்தளங்கள் மூலம் அவதூறு பரப்பப்படுகிறது. இப்போது நுகேகொட பேரணிக்குக் கடுமையாகப் பயந்துவிட்டார்கள். அதனால் பொய்களைப் பரப்புகிறார்கள். இந்த அவதூறுகள் மற்றும் பழிகள் அனைத்துக்கும் 21ஆம் திகதி பதில் கிடைக்கும்” என்றார்.

இன்று (19) பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்த அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ, நாமல் ராஜபக்ஷவின் சட்டப் பட்டச் சான்றிதழ் தொடர்பாக சர்ச்சைக்குரிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும், அதற்குப் பதிலளிப்பது அவரது பொறுப்பு என்றும் கூறியிருந்தார்.

எனினும், பாராளுமன்றத்தின் மதிய உணவு இடைவேளைக்குப் பின்னர் இதற்கு பதிலளித்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக்க கருத்துத் தெரிவிக்கையில், குறித்த சம்பவம் தொடர்பாக நாமல் ராஜபக்ஷவிடம் வாக்குமூலம் பெறப்பட்ட போதும், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திற்கு இதுவரையில் எந்தவொரு விடயத்தையும் அறிவிக்கவில்லை என்று தெரிவித்தார்.

“அரசாங்கம் தோல்வியடையும் போது அவதூறு பரப்புவது அவ்வளவு நல்லதல்ல” என்றும் டி.வி. சானக்க மேலும் பாராளுமன்றத்தில் தெரிவித்தார். (ஐ)

# கோர விபத்தில் இருவர் மரணம்



இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளை செலுத்திய இரு நபர்களும் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் துயரச் சம்பவம் அரலகங்வில -தெஹியத்தகண்டிய பிரதான வீதியில் அரலகங்வில பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு இன்று அறிவித்துள்ளது.

வேஹேரகலயில் இருந்து அரலங்வில நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிர்த் திசையிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியது.

விபத்தில் காயமடைந்த இரு மோட்டார் சைக்கிள்களின் செலுத்துநர்கள் மற்றும் மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து பயணித்த பெண் ஒருவர் உட்பட 3 பேர் அரலகங்வில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். எனினும், படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர்கள் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

21 மற்றும் 55 வயதுடைய ருஹுனுகம மற்றும் அரலகங்வில ஆகிய பகுதிகளை சேர்ந்தவர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

இதேவேளை, படுகாயமடைந்த பெண் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் அரலகங்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிரைவேட்) லிமிடெட்
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# புத்தர் சிலை நிறுவியதற்கு தொல்.திருமாவளவன் கண்டனம்: கூட்டாட்சிக்கு வலியுறுத்தல்

ஈழமண்ணில் திருகோணமலை பகுதியில் நவம்பர் 16 அன்று புத்தர் சிலை ஒன்றை சிங்களப் பௌத்த பிக்குகள் நிறுவியுள்ளனர். அப்பகுதியைச் சார்ந்த தமிழ்மக்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தவுடன் பொலிஸார் அதனை அப்புறப்படுத்தியுள்ளனர். ஆனால், இலங்கை பாராளுமன்றத்தில் சிங்கள பௌத்த பேரினவாதிகள் புத்தர் சிலையை அப்புறப்படுத்திய நடவடிக்கையைக் கண்டித்ததுடன், உடனே அதனை அங்கே நிறுவிட வேண்டுமென கொக்கரித்துள்ளனர்.

அதனையடுத்து மீண்டும் அதேசிலையை அதே இடத்தில் நிறுவியுள்ளனர். இடதுசாரி பாரம்பரியத்தைச் சார்ந்தவர்களென காட்டிக் கொள்ளும் ஜேவிபி அரசு , வழக்கமான 'சிங்கள பேரினவாத அரசு' தான் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் செயல்பட்டுள்ளது. இந்த அடாவடி ஆதிக்கப் போக்கை விடுதலைச்சிறுத்தைகள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என அந்த கட்சியின் நிறுவுனர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

தமிழர்களின் தாயகமான ஈழமண்ணில் கலாச்சார படையெடுப்பை நடத்தும் ஒரு வடிவமாக ஆங்காங்கே கவுதம புத்தர் சிலைகளை நிறுவும் நடவடிக்கைகளில் சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். தமிழ் மண்ணை சிங்களமயப் படுத்துவதையும் பௌத்த மயப்படுத்துவதையும் ஒரு செயல்திட்டமாக வரையறுத்துத் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர்.

வலதுசாரிகள் மட்டுமின்றி இடதுசாரிகளும் அதனைத் தொடரும் நிலை உள்ளது. இதன்மூலம், ஜனாதிபதி அநுர திசாநாயக்கவும் கடந்தகால ஜனாதிபதிகளைப் போலவே இலங்கை தீவைச் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரியதாக நம்புகிறார் என அறியமுடிகிறது. இதற்கு அவர்களின் அரசியலமைப்புச் சட்டம்தான் வழிவகுக்கிறது.



சிங்கள - பௌத்த -பெரும்பான்மைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒற்றை ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டதாகவும், தமிழினத்தை ஒடுக்குவதற்கான பேரினவாதக் கூறுகளைக் கொண்டதாகவும் அரசமைப்புச் சட்டம் இருப்பதே இதற்கு காரணமாகும்.

அதிபர் அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கூட்டணியின் அரசு விரைவில் புதியதொரு அரசமைப்புச் சட்டத்தை யாத்திட திட்டமிட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்நிலையில், தமிழ்மக்களின் நலன்கருதி இலங்கை தேசத்துக்கான ஆட்சி நிர்வாகத்தில் 'கூட்டாட்சி' (சமஷ்டி) நிர்வாக முறையை அரசமைப்புச்சட்டத்தில் இடம்பெற செய்ய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேண்டுகோள் விடுக்கிறது.

ஏற்கனவே, தமிழர்களின் தரப்பாக நின்று இந்திய ஒன்றிய அரசு, 'இந்திய -இலங்கை ஒப்பந்தந்தை' ஏற்படுத்திய வரலாறு உள்ளது. இன்னும் அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்திட வேண்டுமென சிங்கள ஆட்சியாளர்களை வலியுறுத்த வேண்டிய 'தார்மீகப் பொறுப்பு' இந்திய ஆட்சியாளர்களுக்கு உண்டு என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

அந்த வகையில், புதிய அரசியல் யாப்பில் தமிழ்த் தேசிய இனத்துக்கான முழுமுற்றான 'தன்னாட்சி அதிகாரத்தை' வழங்குவதற்குரிய வாய்ப்பை உருவாக்கிட வேண்டுமென இந்திய ஒன்றிய அரசுக்கு விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறோம்.

தமிழ் மக்கள் பௌத்த மதத்துக்கு எதிரானவர்கள் அல்லர். தமிழ் மக்களின் ஒரு சாரார் கடந்த காலங்களில் பௌத்த மதத்தைச் சார்ந்தும் வாழ்ந்தார்கள். தமிழில் உள்ள மணிமேகலை, குண்டலகேசி போன்ற காப்பியங்கள் இதற்கான சான்றுகள் ஆகும். ஆனால், கௌதம புத்தரின் போதனைகளுக்கு எதிராக, பௌத்த தர்மத்துக்கு முற்றிலும் விரோதமாக, கௌதம புத்தரையே இழிவுபடுத்துவதுபோன்று தமிழர்களை ஆக்கிரமிக்கும் ஒரு கருவியாக பௌத்தத்தைப் பயன்படுத்துவதையே தமிழ் மக்கள் கடுமையாக எதிர்க்கிறார்கள்.

அண்மையில், நான் யாழ்ப்பாணத்துக்கு சென்றிருந்தபோது ஈழத்தின் களநிலையை என்னால் உணர முடிந்தது. யுத்தத்தின்போது நேரடியாகவே இனவழிப்புச் செய்யப்பட்ட தமிழ் மக்கள், இப்போதும் பௌத்த சிங்களப் பேரினவாதத்தால் திட்டமிடப்பட்ட வகையில் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புக்கு ஆளாகி வருகிறார்கள். இலங்கையின் ஒற்றை ஆட்சி முறைமையின்கீழ் தமிழ் மக்கள் ஒருபோதும் நிம்மதியாக வாழமுடியாது.

எனவே, புதிய அரசமைப்பில் தமிழர்களுக்கான இறைமையுடன் கூடிய 'சமஷ்டியை' உறுதி செய்வதே இத்தகைய ஆக்கிரமிப்புகளிலிருந்தும் ஆதிக்கத்திலிருந்தும் அவர்களை விடுதலை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## தொலைபேசி அழைப்பு மற்றும் இணைய வரி தொடர்பான விளக்கம்!



கொழும்பு, நவ.19

கைப்பேசி பயனர்கள் இணையச்சேவைகளுக்கு 20.3ூவரியும்,வழக்கமான குரல் அழைப்புகளுக்கு 38ூ சதவீத வரியும் செலுத்த வேண்டும் என்று தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல்ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

அரசாங்க நிதிப் பற்றிய குழுக்கூட்டத்தின் போது இந்த விளக்கம் வழங்கப்பட்டது. குழுவின் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா, முற்கொடுப்பனவு மொபைல் சேவைகளைப் பயன்படுத்தும் நுகர்வோர் மீது விதிக்கப்படும் உண்மையான வரி குறித்து கேள்விகளை எழுப்பினார்.

இந்தக் கேள்விக்குப் பதிலளித்த தொலைத்தொடர்பு ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் இந்திரஜித் ஹந்தபங்கொட, தொலைத்தொடர்பு வரிகளின் கட்டமைப்பு தொடர்பில் விளக்கமளித்தார்.

ஹந்தபங்கொடவின் கூற்றுப்படி, இணையப் பயன்பாட்டிற்கு தொலைத்தொடர்பு வரி விதிக்கப்படுவதில்லை, ஆனால் நுகர்வோர் இணைய சேவைகளுக்கு சுமார் 20.3ூ பயன்பாட்டு வரியைச் (நககநஉவளைந வயஒ) செலுத்துகின்றனர் என தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிராட்பேண்ட் தொடர்பான குரல் வசதிகள் உட்பட, குரல் சேவைகளுக்கு 38.4ூ பயன்பாட்டு வரி விதிக்கப்படுகிறது.

கலாநிதி ஹர்ச டி சில்வா, ஒரு பயனர் டேட்டா மற்றும் குரல் தொடர்பு இரண்டிலும் ஈடுபடும்போது, 100 ரூபாயை முற்கொடுப்பனவாக செலுத்தினால் எவ்வளவு தொகையை உண்மையில் பயன்படுத்த முடியும் என்று கேள்வி எழுப்பினார்.

100 ரூபாய் டேட்டா பயன்பாட்டிற்காக சுமார் 20.4ூ குறைக்கப்படுகிறது என்றும், குறிப்பாக 80 ரூபாவை பயன்படுத்த முடியும் என கூறினார்.


அதே சமயம் குரல் அழைப்புகளுக்கு அதிகப்படியான 38.4ூ வரி விதிக்கப்படுகிறது என்றும், நுகர்வோருக்கு இறுதியாகக் கிடைக்கும் பயனுள்ள தொகை அவர்களின் தனிப்பட்ட பயன்பாட்டு முறையைச் சார்ந்தது என்றும் ஹந்தபங்கொட மீண்டும் வலியுறுத்தினார்.

தொடர்ந்து கேள்வி எழுப்பப்பட்ட போதிலும், ரூபாய் 100 முற்கொடுப்பனவுக்கு பயன்படுத்தக்கூடிய மதிப்பைக் குறிக்கும் ஒரு திட்டவட்டமான பதிலை அவரால் வழங்க முடியவில்லை.

பயன்பாட்டு சேர்க்கைகள் நுகர்வோருக்கு நுகர்வோர் மாறுபடும் என்பதால் அவரால் உறுதியான பதிலை வழங்க முடியவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்தக் கூட்டத்தின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் பலிஹேனவும் சில பகுதிகளில் போதிய இணைய வசதிகள் இன்மையினால் மாணவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் குறித்து கவலைகளை எடுத்துரைத்தார், மேலும் இந்த விஷயத்தில் அவசர கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். (ஐ)

## நாட்டில் உற்பத்தி மற்றும் சேவைகள் ஒக்டோபரில் அதிகரிப்பு




கொழும்பு, நவ.19


கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2025 ஒக்டோபரில் உற்பத்தி மற்றும் சேவைகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதலை காட்டுவதாக இலங்கை மத்திய வங்கி அறிவித துள்ளது.

உற்பத்திக்கான இலங்கைக் கொள் வனவு முகாமையாளர் சுட்டெண் கடந்த ஒக்டோபரில் 61.0 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, உற்பத்தி நடவடிக்கைகளில் அதிகரிப்பொன்றை பதிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனைத்து துணைச் சுட்டெண்களும் வளர்ச்சிக்காக சாதகமாக பங்களித்து, இவ்வதிகரிப்பானது பரந்த அடிப்படையினைக் கொண்டு காணப்படுகின்றது.

பணிகளுக்கான இலங்கைக்கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் 2025 ஒக்டோபரில் 66.0 சுட்டெண் பெறுமதியைப் பதிவுசெய்து, கடந்த மாதத்துடன் ஒப்பிடுகையில் சேவைகள் நடவடிக்கைகளில் விரிவடைதலை பதிவு செய்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ஐ)

## இறந்து கரையொதுங்கிய டொல்பின் – பார்வையிட குவியும் கல்முனை மக்கள்





அம்பாறை - கல்முனை கடற்கரை பள்ளிவாசல் முன்பாக உள்ள கடற்பிரதேசத்தில் டொல்பின் மீன் ஒன்று இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளது.

இன்று கரையொதுங்கிய குறித்த மீனை அப்பகுதி மக்கள் பார்வையிட்டதுடன் உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த மீன் சுமார் 3 முதல் 4 அடி வரையான நீளம் கொண்டதுடன் இப்பகுதியில் ஏற்பட்டுள்ள கடல் கொந்தளிப்பினால் கரையொதுங்கியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த மீனை காண்பதற்கு அப்பகுதி மக்கள் வருகை தந்த வண்ணமுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முகத்துவாரம் வெட்டப்பட்டுள்ளதனால் கடலை நோக்கி ஆற்று வாழைகள், சல்பீனியாக்கள் சென்று கடற்கரையில் தேங்கி காணப்படுகின்றது. (ஐ)

# தேர்தல் ஆணையத்தை ராகுல் மிரட்டுகிறார்: 272 மாஜி நீதிபதிகள், அதிகாரிகள் கூட்டு அறிக்கை



தேர்தல் ஆணையத்தை கடுமையாக விமர்சித்து வரும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு எதிராக, முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் உட்பட 272 முக்கிய பிரமுகர்கள் கூட்டாக கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளனர். நாடு முழுவதும் வாக்குத் திருட்டு நடைபெறுவதாகவும், இதற்கு ஆளும் ஒன்றிய அரசுக்கு இந்திய தேர்தல் ஆணையம் துணை போவதாகவும் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி சமீப காலமாக தொடர் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகிறார்.

இந்த நிலையில், அவரது செயல்பாடுகளுக்குக் கண்டனம் தெரிவித்து உச்ச நீதிமன்றம் மற்றும் பல்வேறு உயர் நீதிமன்றங்களைச் சேர்ந்த 16 முன்னாள் நீதிபதிகள், 123 முன்னாள் அரசு உயர் அதிகாரிகள், 14 முன்னாள் தூதர்கள் மற்றும் 123 முன்னாள் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் என மொத்தம் 272 பேர் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில், இந்திய ஜனநாயகம் சமீப காலமாகத் தாக்குதலுக்கு உள்ளாகி வருவதாகவும், அரசு நிறுவனங்களுக்கு எதிராக விஷமத்தனமான செயல்பாடுகள் அதிகரித்திருப்பது குறித்தும் கவலை தெரிவித்துள்ளனர். மேலும் அந்த அறிக்கையில், 'தேர்தல் ஆணையத்தை ராகுல் காந்தி பலமுறை தாக்குவதோடு, வாக்குத் திருட்டில் ஈடுபடுபவர்களை விட மாட்டேன் என மிரட்டலும் விடுக்கிறார். தேர்தல் தோல்வி விரக்தியில் இதுபோன்று செயல்படுவதை விடுத்து, ஜனநாயகத் தீர்ப்புகளை மனதார ஏற்றுக்கொள்ள வேண்டும். எதிர்க்கட்சிகளின் முரண்பாடுகள் கவலைக்குரியவை. குறிப்பாக, தங்களுக்குச்சாதகமாக முடிவுகள்வரும்மாநிலங்களில் அமைதியாக இருந்துவிட்டு, பாதகமாக முடிவுகள் வந்தால் தேர்தல் ஆணையத்தை வில்லனாகச் சித்தரிக்கிறார்கள்' என்று கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளனர். மேலும், ஐரோப்பிய நாடுகள் தங்கள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பது போல், இந்தியாவும் அதன் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஐ)

## அனுமனை அவமதித்து விட்டதாக டைரக்டர் ராஜமவுலி மீது இந்து அமைப்பினர் புகார்




இயக்குனர் எஸ்.எஸ்.ராஜமவுலி தற்போது 'வாரணாசி' என்ற பான் வேர்ல்ட் படத்தை இயக்கி வருகிறார். இப்படத்தில் மகேஷ் பாபு, பிரியங்கா சோப்ரா முதன்மை வேடத்திலும், பிருத்விராஜ் சுகுமாரன் வில்லனாகவும் நடிக்கின்றனர். இதன் டைட்டில் மற்றும் கிளிம்ஸ் வீடியோ சமீபத்தில் ராமோஜி ராவ் பிலிம் சிட்டியில் நடந்த மிக பிரமாண்டமான நிகழ்ச்சியில் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மிகப்பெரிய திரையில் 'வாரணாசி' படத்தின் கிளிம்ஸ் வீடியோ ஒளிபரப்பியபோது சில தொழில்நுட்ப கோளாறுகள் ஏற்பட்டது. அதன்பிறகு பேசிய இயக்குனர் ராஜமவுலி, "எனக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. ஆனால், என் அப்பா எப்போதும் நான் அனுமனால் ஆசிர்வதிக்கப்பட்டு வருவதாக கூறுவார். என் மனைவியும் அனுமன் பக்தை. அனுமனை தனது நண்பன் போல நினைத்து அவருடன் பேசி கொண்டிருப்பார் என் மனைவி.

இந்த தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டபோது எனக்கு அவர்கள் மீது கடுமையாக கோபம் வந்தது. இப்படித்தான் அனுமன் எனக்கு உதவுவாரா? என் மனைவியின் நண்பன் அனுமன் இந்த முறையாவது எனக்கு இதை சரிசெய்வாரா" என பேசினார். இந்நிலையில், ராஜமவுலி, இந்து கடவுளான அனுமனை அவமதித்து விட்டதாக ஐதராபாத்திலுள்ள காவல் நிலையம் ஒன்றில் இந்து அமைப்பினர் அவர்மீது புகார் அளித்துள்ளனர். (ஐ)

## சத்ய சாய் பாபா நூற்றாண்டு விழாவில் மோடி பங்கேற்பு



ஆந்திரப் பிரதேசத்தில் நடக்கும் சத்ய சாய் பாபாவின் நூற்றாண்டு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்கிறார். ஆந்திர மாநிலத்தில் உள்ள புட்டபர்த்தியில் இன்று மறைந்த ஆன்மீக தலைவர் சத்ய சாய் பாபாவின் நூற்றாண்டு விழா நடைபெறுகின்றது. இந்த விழாவில் பிரதமர் மோடி பங்கேற்கிறார்.

புட்டபர்த்தியில் உள்ள சத்ய சாய் பாபாவின் சன்னதி மற்றும் மகாசமாதியையும் அவர் பார்வையிடுகின்றார். விழாவில், சத்ய சாய் பாபாவின் வாழ்க்கை, போதனைகள் மற்றும் நீடித்த பாரம்பரியத்தை கவுரவிக்கும் வகையில் நினைவு நாணயம், சத்ய சாய் பாபா குறித்த தொகுப்பை அவர் வெளியிட்டு உரையாற்றுகின்றார். (ஐ)



## சபரிமலையில் நேற்று நண்பகலுடன் முடிந்த 43 மணி நேரத்தில் சுமார் 2 லட்சம் பேர் தரிசனம்

சபரிமலையில் நேற்று நண்பகலுடன் முடிந்த 43 மணி நேரத்தில் சுமார் 2 லட்சம் பேர் தரிசனம் செய்துள்ளனர். சபரிமலையில் பக்தர்கள் வருகை அதிகரித்து காணப்படும் நிலையில் பல்வேறு பிரச்சனைகள் பக்தர்கள் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக மண்டல பூஜைகள் தொடங்குவதற்கு முன்பாகவே பம்பை, நிலக்கல் உள்ளிட்ட பகுதிகளில் முன்னேற்பாடுகள் செய்வது வழக்கம். பக்தர்களுக்கு குடி தண்ணீர் வசதி, மின்சாரம் போன்றவற்றையும், கழிப்பிட வசதி களையும் முன்னரே ஏற்பாடு செய்து வைத்திருப்பர்.

இந்த ஆண்டு மண்டல பூஜை தொடக்க நாளில் பக்தர்கள் செல்ல கூடிய இடங்களில் குடி தண்ணீர் வசதியோ, மின் வசதி, கழிப்பிட வசதி இல்லாத காரணத்தினால் பல சிரமங்களை பக்தர்கள் சந்தித்து வருகின்றனர். கடந்த இரண்டு நாட்களில் 2 லட்சம் பக்தர்களுக்கு மேல் சாமி தரிசனம் செய்துள்ளனர். பல நேரங்களில் கூட்டம் அதிகரித்த காரணத்தினால் சன்னிதானம் பகுதிக்குபக்தர்கள்வந்தால்பெரிய அளவிலான பிரச்சனைகள் ஏற்படும் என்ற காரணத்தை அறிந்து சரண்கொத்தி மற்றும் மரக்கூட்டம் பகுதிகளில் பக்தர்கள் கூட்டமாக நிறுத்தி வைக்கப்பட்டு திறந்து விடக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

பக்தர்கள் 5 மணி நேரம் ஒரே இடத்தில் மலைப்பகுதிகளில் நிறுத்தி வைக்கக்கூடிய காரணத்தினால் நோய்வாய்ப்பட்ட பக்தர்கள் இன்னல்களை சந்தித்து, மயங்கி விழக்கூடிய நிலையும் ஏற்பட்டது. கடந்த இரண்டு, மூன்று நாட்களாக ஏற்பட்ட பல்வேறு பிரச்சனைகள் பக்தர்கள் இடத்தில் எழுந்த புகார்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இன்று முதல் தேவசம் போர்டு நிர்வாகம் புதிய முடிவை எடுத்துள்ளது. பம்பைக்கு வரக்கூடிய பக்தர்களின் எண்ணிக்கையை கட்டுக்குள் கொண்டுவரும் விதமாக நிலக்கல் பகுதியில் பக்தர்களை தங்க வைப்பதற்கான முடிவை எடுத்துள்ளனர்.

அதன்படி அதிக பக்தர்கள் வரும் பட்சத்தில் நிலக்கல்லில் இருந்து கூட்டமாக பக்தர்களை அனுப்பிவைத்து ஒழுங்குபடுத்தும் முடிவை எடுத்துள்ளனர். இன்று காலை முதல் கூட்ட நெரிசலோ அல்லது பிரச்சனைகளோ இல்லாமல் அதிகாலை முதல் சாமி தரிசனம் நடையப்பெற்று வருகிறது. கடந்த இரண்டு நாட்களில் நடைபெற்ற பல்வேறு பிரச்சனைகள் காரணமாக பலரும் சபரிமலைக்கு வந்து சாமி தரிசனம் செய்யாமல் திரும்பி செல்லக்கூடிய நிலையம் ஏற்பட்டுள்ளது.

திருவண்ணாமலையிலிருந்து வந்த 40 பக்தர்கள்தங்களுடைய இருமுடியைபம்பையில் ஒப்படைத்துவிட்டு சாமி தரிசனம் செய்யாமல் மனவிரக்தியோடு சென்றனர். இந்த நிலையில் இன்று காலை பக்தர்களின் கூட்டத்தை கட்டுப்படுத்தும் விதமாக எடுக்கப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக ஒழுங்கப்படுத்தப்பட்டுள்ளது. கிட்டத்தட்ட ஒரு லட்சம் பக்தர்கள் வரை சாமி தரிசனம் செய்யும் வகையில் திட்டங்கள் வகுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.(ஐ)



# சமூகத்தில் போதைப்பொருள் பாவனை ஒரு சமூக அச்சுறுத்தல்



குணாழினி, தெட்சணாமூர்த்தி
ஊடகக் கற்கைகள்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

மனித சமூகம் இன்று வேகமாக முன்னேறிவருவதாக தோன்றினாலும் அதன் உள்ளே ஆழமாக வேரூன்றி வரும் சில அறிவூட்டும் பழக்கங்கள் சமூக அமைப்பை அழிக்கும் வகையில் வளர்ந்து வருகின்றன. அவற்றில் மிக முக்கியமானதும் ஆபத்தானதுமாக போதைப்பொருள் பாவனை காணப்படுகிறது.

போதைப்பொருள் என்பது உடலின் இயல்பான செயல்பாடுகளை மாற்றி மனநிலையையும் உடல் நிலையும் பாதிக்கும் ஒரு தீய விடயமாக காணப்படுகிறது. இப் போதைப்பொருளானது இன்றைய இளைஞர்கள் மாணவர்கள் தொழிலாளர்கள் சில சமயங்களில் பெண்கள் என பலதரப்பட்ட வகையினர் இதனால் பாதிப்பை அடைகின்றனர். இப்போதைப் பொருள் பாவனையால் சமூக ஒழுங்கு, குடும்ப அமைதி, மற்றும் நாட்டின் எதிர்காலம் என்பன கேள்விக்குறியாகின்றது.

போதைப்பொருள் ஆனது உடலின் இயல்பு நிலையை மாற்றி மயக்க நிலை, மனநின்மதி அளிக்கும் ஒரு விடயமாக காணப்பட்டாலும் இதன் விளைவு மிகவும் தீவிரமாக அமைகிறது.

போதைப்பொருளை மூன்று வகையாக வகைப்படுதலாம்.

சட்டபூர்வமான போதைப்பொருளாக மதுபானம் புகையிலை போன்றவை காணப்படுகின்றன.

சட்டவிரோதமான போதைப் பொருளாக ஹெரோயின், கொக்கைன், கஞ்சா, ஐஸ் போதை பொருள் என பல வகைப்படுகின்றன.

வைத்திய துறையில் மருந்தாக பயன்படுத்தப்படும் அதாவது சில நரம்பு தளர்ச்சி மருந்துகள்இ தூக்கம் மருந்துகள் மற்றும் வலி நிவாரணிகள் என்பன அதிகமான அளவில் பயன்படுத்தப்படும் வேளையில் போதைப் பொருளாக மாறுகின்றன.

போதை பொருள் பாவனையானது ஒரு நாள் திடீரென ஆரம்பம் ஆகக்கூடிய விடயமாக அல்லாது இப்பழக்கத்திற்கு பின்னணியில் பல்வேறு சமூக மனநிலை மற்றும் பொருளாதார காரணங்கள் அமைகின்றன. அதாவது ஆர்வம் மற்றும் ஆராய்ச்சி செய்யும் மனப்பாங்குடன் ஒருமுறையாவது முயற்சி செய்து பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் ஆரம்பிக்கும் இத் தவறான பழக்கம் அப்பழக்கத்திலிருந்து

திகழ்வதுடன், நோயாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு செயற்கை அவயவங்களை தயாரித்து வழங்கும் பணியை மேற்கொள்கின்றது. இதனூடாக பலரின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுகின்றது. நிலையத்தின் தலைவராக மறைந்த திரு. ரி.ஆர்.ஆர். ராஜன் அவர்கள் திகழ்ந்த காலப்பகுதியில், இலங்கை அரசாங்கத்துக்கு மேலதிகமாக, சர்வதேச மட்டத்தில் புகழ்பெற்ற அமைப்புகளான ருளுயுஜனு மற்றும் ழுேசுயுனு ஆகியவற்றுடன் வெற்றிகரமாக கைகோர்த்து, சகல இனங்களையும் சேர்ந்த இருபாலாருக்கும் பொருந்தக்கூடிய செயற்கை அவயவங்களை தயாரிக்கும் பணிகளுக்கு ஆதரவளித்திருந்தார்.

சவால்கள் நிறைந்த பொருளாதார மற்றும் வியாபார சூழலில், இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்கு தொடர்ச்சியான 21 வருடங்களாக நிறுவனம் ஆதரவளித்து வருகின்றது. முக்கியமாக, இந்த மாதிரியான கூட்டாண்மை சமூகப் பொறுப்புத் திட்டத்தில் ஈடுபடும் இந்தப் பிரிவைச் சேர்ந்த ஒரே நிறுவனமாகவும் சன் மெட்ச் நிறுவனம் திகழ்கின்றது.

உறுதியான கூட்டாண்மை சமூக பொறுப்புணர்வு செயற்பாடுகளுக்கு அர்ப்பணிப்பைக் கொண்ட நிறுவனம் எனும் வகையில், இலங்கையர்கள் மத்தியில் அர்த்தமுள்ள மாற்றத்தை ஏற்படுத்த நிறுவனம் எதிர்பார்க்கின்றது. "நெவத அவிதிமு" மீண்டும் நடமாடுவோம்) திட்டத்தினூடாக நபர்களுக்கு மீண்டும் நடமாட சன் மெட்ச் நிறுவனம் உதவுவது மட்டுமன்றி, பணிக்குழாமில் மீண்டும் இணைந்து கொள்வதற்கும், அதனூடாக கண்ணியமான, சுதந்திரமான வாழ்க்கையை முன்னெடுக்கவும் வாய்ப்பை ஏற்படுத்துகின்றது.

இவற்றில் அதிகமாக போதை பொருள் பாவனை தூண்டுபவையாக சமூக ஊடகங்கள் மற்றும் திரைப்படங்கள் என்பன காணப்படுகின்றன அதாவது திரைப்படங்களில் காணப்படும் காட்சிகளில் நடிகர் நடிகைகள் போதைப்பொருள் பாவிப்பதும் சமூக ஊடகங்களில்

விளம்பரப்படுத்தல்களும் இளைஞர்களை போதைப்பொருளுக்கு அடிமையாக்குகின்றன. அதுமட்டுமல்லாது பொருளாதார பின்னடைவு மற்றும் வேலை இழப்புகள் அதாவது வறுமை மற்றும் மன அழுத்தத்தில் இருந்து தப்பித்து கொள்ளும் நோக்கில் போதைப்பொருளை பாவனை செய்ய ஆரம்பித்து மேலும் மீள முடியாத பிரச்சினைகளுக்குள் தள்ளப்படுகின்றனர்.

போதைப்பொருளானது ஒருவரது உடல் மற்றும் மனநிலை தொடர்பான பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. ஒருவரின் மன உடல் பாதிப்பானது குடும்பத்தையும் அக்குடும்பம் சார் சூழலையும் சமூகத்தையும் பாதிக்கும் பாரிய விடயமாக அமைகிறது.

ஒருவரது போதைப்பொருள் பாவனையானது குடும்பம் மற்றும் சமூகத்தின் மீது ஏற்படுத்தும் விளைவுகள் ஒரு குடும்பத்தில் ஒருவர் போதைப்பொருள் பாவனைக்கு பழக்கப்பட்டாலும் அதன் துயரம் அக்குடும்பம் முழுவதும் அனுபவிக்க வேண்டிய நிலையை அடைகிறது. பெற்றோர் குடும்பம் அங்கத்தவர்கள் மனவேதனை அடைவதோடு குழந்தைகளின் எதிர்காலமும்

பாதிப்படைவதோடு அவர்களுக்கான சமூக மதிப்பும் குறைவடைகின்றன சமூகத்தில் மட்டுமல்லாது எல்லா விடயங்களும் சிதைவடைகின்றன.

இப்போதைப்பொருள் பாவனையை சமூக மட்டத்திலிருந்து பார்க்கும் பொழுது குற்ற செயல்களை அதிகரிக்கும் செயல்பாடு அதாவது திருட்டு மோசடி வன்முறை மற்றும் பாலியல் குற்றங்கள் போன்றவை இப்போதை பொருள் பாவனையால் ஏற்படுகின்றன.

உலகளாவிய அளவில் போதைப்பொருள் ஒரு பில்லியன் டாலர் வருவத்தோடுஇ உலகத்தில் சுமார் 35 கோடி மக்கள் குறைந்தது ஒரு முறையாவது போதைப்பொருள் பயன்படுத்தி உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் (NDDCB) கூறுகிறது.

இலங்கையில் போதைப்பொருள் ஒரு மிகப்பெரிய சவலாக தற்போது காணப்படுகிறது. ஹெரோயின்இ ஐஸ், கஞ்சா, ஹெக்கேயின் என பல போதைப்பொருட்கள் நாடு முழுவதும் பரவிக்காணப்படுகின்றன. அத்தோடு பாடசாலை மாணவர்களும் இதனை பாவனை செய்யும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர்.

மத்திய அரசின் போதைப்பொருள் தடுப்பு அலுவலகம் வருடந்தோரும் நூற்றுக்கணக்கான கைது நடவடிக்கைகளை மேற்கொண்டலும் இவற்றை முற்று முபுதாக அழிப்பது என்பது கடினமானதாகவே காணப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் போதைப்பொருள் கடத்தல் மற்றும் பாவனையைக் கட்டுப்படுத்த பல சட்டங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதாவது போதைப்பொருள் இறக்குமதி விற்பனை பாவனை ஆகியவற்றை சட்டவிரோதம் ஆக்கி, னுயபெநசழரள னுசரபள ஊழனெசழட டீழயசன செயற்படுகிறது. போதைப்பொருள் தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகைகளுக்கு பொறுப்பாக **National Dangerous Drugs Control Board** செய்யற்படுகிறது. அத்தோடு போதைப்பொருளுக்கு

அடிமையானவர்களை மீட்டு எடுக்கவும் அவர்களுக்கான மனநல ஆலோசனை வழங்குபவர்களாக தொழிற்ப்படுகின்றன. மற்றும் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பான கல்வியும் கற்பிக்கப்படுகிறது.

(7ஆம் பக்கம் பார்க்க..)

# லெபனானில் இஸ்ரேல் விமானப்படை தாக்குதல்: 11 பேர் உயிரிழப்பு



தெற்கு லெபனானில் உள்ள பாலஸ்தீன அகதிகள் முகாம் மீது இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டதாக லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல், ஹமாஸ் இடையே ஒரு வருடங்களுக்கும் மேலாக போர் நடந்து வருகிறது. ஹமாஸ் அமைப்புக்கு ஆதரவாக இஸ்ரேல் மீது லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பு தாக்குதல் நடத்தியது. இதில் கோபம் அடைந்த இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதல் நடத்தியது. பின்னர் நீண்ட பேச்சுவார்த்தைக்கு பிறகு இருநாடுகளுக்கு இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இருப்பினும், லெபனானின் தெற்கில் 5 இடங்களில் இஸ்ரேல் தனது படைகளை நிறுத்தியுள்ளது. அங்கிருந்து ஹிஸ்புல்லா அமைப்பினரின் நிலைகளை குறிவைத்து தொடர்ந்து தாக்குதலை நடத்தி வருகிறது. தற்போது இஸ்ரேல் படையினர் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளனர். இஸ்ரேல் படைகள் குவிக்கப்பட்டிருக்கும் லெபனானின் தெற்கு பகுதியில் இருந்து ஆயுதங்களை ஹிஸ்புல்லா அமைப்பினர் குறைக்க வேண்டும் என்று இஸ்ரேல் எச்சரித்து இருந்தது.

இந்நிலையில், தெற்கு லெபனானில் உள்ள பாலஸ்தீன அகதிகள் முகாம் மீது இஸ்ரேல் விமானப்படை நடத்திய தாக்குதலில் 11 பேர் கொல்லப்பட்டனர். மேலும் நான்கு பேர் காயமடைந்தனர்.

ஹமாஸிற்கான பயிற்சி மையமாக அகதிகள் முகாம் செயல்பட்டு வந்தது.

ஹமாஸ் எங்கு வேலை செய்தாலும் இஸ்ரேலிய ராணுவம் தொடர்ந்து ஹமாஸ் அமைப்புக்கு எதிராகச் செயல்படும் என இஸ்ரேல் பாதுகாப்பு துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## அமெரிக்கா உலக கோப்பை கால்பந்து விசாவில் முன்னுரிமை



அடுத்த ஆண்டு நடைபெற உள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டியை காண வரும் ரசிகர்களுக்காக, சிறப்பு விரைவு விசா வழங்க திட்டமிட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, மெக்சிகோ, கனடாவில் அடுத்த ஆண்டு ஜூன் முதல் ஜூலை வரை உலகக் கோப்பை கால்பந்து போட்டி நடக்க இருக்கிறது. அமெரிக்காவில் நடக்கும் போட்டியை காண தற்போதே லட்சக்கணக்கானோர் டிக்கெட் முன்பதிவு செய்துள்ளனர்.

டிரம்பின் விசா கட்டுப்பாடுகள் கால்பந்து போட்டியை காண வரும் ரசிகர்களை பாதிக்குமா என்ற சந்தேகம் இருந்து வந்தது. இந்நிலையில், வெள்ளை மாளிகையில் 'பிபா' எனப்படும் சர்வதேச கால்பந்து சங்கத்தின் தலைவர் ஜியான்னி இன்பான்டினோ உடன் இணைந்து செய்தியாளர்களிடம் பேசிய டிரம்ப், 'பிபா பாஸ்' என்ற புதிய திட்டத்தை அறிவித்தார்.

இந்த திட்டத்தின் கீழ், பிபா மூலம் நேரடியாக டிக்கெட் வாங்கிய ரசிகர்களுக்கு விசா நேர்காணலில் முன்னுரிமை அளிக்கப்படும். ஆறு முதல் எட்டு வாரங்களுக்குள் அவர்கள் நேர்காணலுக்கு அழைக்கப்படுவர். (ஐ)

## குழந்தைகள் ரைம்ஸ் மூலம் யூ டியூபில் உலக அளவில் பிரபலமான நிறுவனம்: வர்த்தக சந்தையில் அறிமுகம்




குழந்தைகள் ரைம்ஸ் மூலம் யூடியூப்பில் உலக அளவில் பிரபலமான நிறுவனம் வர்த்தக சந்தையில் அறிமுகமாக முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. தென் கொரியாவை சார்ந்த பொழுது போக்கு நிறுவனமான பிங்க் ஃபாங் மூலம் 2016ம் ஆண்டு யூடியூப்பில் வெளியானது. குழந்தைகளை கவரும் வகையில் கவர்ச்சிகரமான அனிமேக்ஷன் கார்டூன்கள், எளிய பாடல் வரிகளால் பேபி ஷார்க் ரைம்ஸ் உலக அளவில் வைரலானது. மொழி வேறுபாடின்றி இன்றளவும் குழந்தைகள் இருக்கும் அனைத்து வீடுகளிலும் தவறாமல் பேபி ஷார்க் ஒளித்து கொண்டுள்ளது.

யூடியூப்பில் அதிகம் பார்க்கப்பட்ட வீடியோ என்ற சாதனையையும் படைத்துள்ளது. நாள் ஒன்றுக்கு சுமார் 47 லட்சம் முறை பார்க்கப்படுவதாக கூறும் பிங்க் ஃபாங் நிறுவனம் இதுவரை 16.4 பில்லியன் பார்வையாளர்களை பெற்றுள்ளதாக கூறுகிறது. குழந்தைகள் உலகத்தில் பிரபலமான பேபி ஷார்க் படைப்பாளர் நிறுவனமான பிங்க் ஃபாங் செவ்வாய்க்கிழமை பங்குசந்தையில் அறிமுகமாகி முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. அதாவது 38 ஆயிரம் கொரிய வான்களுடன் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு பங்கின் விலை வர்த்தகம் தொடங்கிய பின்னர் 61 ஆயிரத்து 60 வான்களாக உயர்ந்தது.

நிறுவனத்தின் இலக்கு வரம்பு உச்சத்தில் 76 பில்லியன் வான் மட்டுமே திரட்டி இருந்தாலும் ஒரு பங்கின் விலை 38 ஆயிரம் வான் என்று நிர்ணயிக்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் மிகவும் பிரபலமானதாக இருந்ததால் விற்கப்படும் பங்குகளின் எண்ணிக்கையை விட 600 மடங்கு அதிகமாக வாங்க முதலீட்டாளர்கள் முன்வந்தனர். பிங்க் ஃபாங் நிறுவனத்தின் கடந்த ஆண்டு லாபம் 97.4 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. இதன் மூலம் அந்த நிறுவனம் வர்த்தகத்திலும் பரந்த உலகளாவிய விரிவாக்கத்தில் ஈடுபடவும் தொடங்கி உள்ளது. (ஐ)



ஈக்வடார்: ஈக்வடாரில் பள்ளத்துக்குள் பேருந்து விழுந்த விபத்தில் 21 பயணிகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். குவாரந்தா - அம்பாட்டோ இடையிலான சாலையில் பயணிகளுடன் சென்ற பேருந்து பள்ளத்துக்குள் கவிழ்ந்து விபத்திற்குள்ளானதில் இந்த சோக சம்பவம் நிகழ்ந்துள்ளது. (ஐ)

## ஷேக் ஹசீனா ஏன் குற்றவாளி என முத்திரை குத்தப்படுகிறார்: வங்கதேச எழுத்தாளர் தஸ்லிமா காட்டம்



வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவுக்கு மரண தண்டனை விதித்துள்ள தீர்ப்பாயத்தின் தீர்ப்பை நாடு கடத்தப்பட்ட வங்கதேச எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரின் கடுமையாக சாடியுள்ளார். அவரது பதிவு: முகமது யூனுஸ் மற்றும் அவரது ஜிஹாதி படைகளால் ஹசீனா அநீதியானவர் என்று அறிவிக்கப்பட்ட நடவடிக்கைகள், யூனுஸ் மற்றும் அதே ஜிஹாதி படைகள் அதே செயல்களைச் செய்யும்போது, அவர்கள் அவற்றை நீதியானவை என்று அறிவிக்கின்றன.

யாராவது நாசவேலைச் செயல்களைச் செய்து தற்போதைய அரசு அவர்களைச் சுட உத்தரவிடும்போது, அரசு தன்னை ஒரு குற்றவாளி என்று கூறுவதில்லை. கடந்த ஜூலை மாதம் நாசவேலைச் செயல்களைச் செய்தவர்களைச் சுட உத்தரவிட்டதற்காக ஹசீனா ஏன் குற்றவாளியாகக் கருதப்படுகிறார்?

ஜூலை மாதம் நாசவேலைச் செய்த பயங்கரவாதிகள், மெட்ரோவுக்கு தீ வைத்தவர்கள், மக்களைக் கொன்றவர்கள், போலீஸ் அதிகாரிகளைக் கொன்றவர்கள் ஏன் சட்டத்தின் முன் நிறுத்தப்பட மாட்டார்கள்? வங்கதேசத்தில் நீதியின் பெயரால் நடக்கும் கேலிக்கூத்து எப்போது முடிவுக்கு வரும்? இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

அதேபோல் ஷேக் ஹசீனாவுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை குறித்து நிருபர்களிடம் காங்கிரஸ் எம்பி சசி தரூர் கூறியதாவது: உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி, எனக்கு மரண தண்டனையில் நம்பிக்கை இல்லை. அதனால் அது மிகவும் கலக்கமூட்டும் விஷயமாக பார்க்கிறேன். மரண தண்டனைகள் கொடுக்கப்படுவதில் எனக்கு உடன்பாடில்லை.

ஷேக் ஹசீனா விஷயத்தில் அவர் இல்லாதபோது விசாரணை நடத்துவதும், தன்னை தற்காத்துக்கொள்ள வாய்ப்பளிக்காமல் மரண தண்டனையை அறிவிப்பது என்பது நியாயமற்றது. வேறொரு நாட்டின் நீதித்துறையின் உள் விஷயங்கள் குறித்து நான் கருத்து தெரிவிப்பது பொருத்தமானதல்ல. இவ்வாறு சசி தரூர் கூறியுள்ளார். (ஐ)

## காணி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டே காணி விடுவிப்பு குறித்து தீர்மானம் எடுக்க வேண்டும்.

தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை இராணுவத்தினர் வசம் வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறான காணிகளை ஒருபோதும் விடுவிக்கக் கூடாது.

பாதுகாப்புக்காரணிகளுடன்தொடர்புடைய காணிகளை விடுவிப்பதற்குப் பதிலாக, காணி உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அல்லது காணிகளுக்குப் பதிலாக நட்டஈடு வழங்க வேண்டும்.

வடக்கு மாகாணத்தில் மீண்டும் போர் ஒன்று தோற்றம் பெறாத வகையில் தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகள் முறையாக அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய காணிகளை விடுவிக்கவே கூடாது.

வடக்கு மக்களுக்கு அநீதி இழைக்க வேண்டும் என்று நாங்கள் குறிப்பிடவில்லை. காணிக்குப் போதுமான அளவு நட்டஈடு வழங்க வேண்டும் என்று கூறுகின்றேன் .

வடக்கு வாக்குகளைப் பெறுவதற்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்காமல் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கி அரசு செயற்பட வேண்டும்.

அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் தேசிய பாதுகாப்பு குறித்து தீர்மானங்களை எடுக்க வேண்டும். அதுதான் நாட்டுக்குத் தேவை." - என்றார்.

## இந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

105 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களின் போது 57 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 56 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதிகளவான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்கள் காரணமாக இடம்பெற்றுள்ளன என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பலரைக் கைது செய்துள்ள பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஞானசாரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் வலியுறுத்தினார்.

கலகொட அத்தே ஞானசார தேரர் திருகோணமலைக்குச் சென்று, வடக்கு மற்றும் கிழக்கு விசேடமாக திருகோணமலை தமிழ் மக்களுக்கே சொந்தமானது எனக் கூறிக் கொண்டு பௌத்த சின்னங்களை அங்கு வைப்பதற்குத் தடையாக இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியனுக்கு எச்சரிக்கை விடுக்கின்றார் எனவும், எவ்வித காரணத்துக்காகவும் எமது செயற்பாடுகளை நிறுத்த முடியாது எனவும் கூறியிருந்தார்.

இது தொடர்பில் இன்று ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்,

"எமது தமிழர் தாயகத்தை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது. பூர்வீகமாகத் தமிழர்கள் வாழ்ந்து வரும் இடத்தில் அடாவடித்தனங்களில் ஈடுபடுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தச் செயற்பாடுகளைப் பார்த்துக் கொண்டு இனியும் இருக்கமாட்டோம். அத்தோடு தேசிய மக்கள் சக்தி அரசு, ஞானசார தேரரின் இனத்துவேஷ செயற்பாடுகளுக்கு இடமளிக்க கூடாது." - என்றார்.

## ஜனாதிபதியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆனால் பதவியேற்று ஒரு வருடமாகியும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை ஜனாதிபதிக்கு எடுத்துக் கூறினோம்.

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதாக ஜனாதிபதி எம்மிடம் உறுதியளித்துள்ளார்.

அத்துடன் அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரு வருடத்திற்குள் மாகாண சபைத் தேர்தலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலும் நடத்தப்படும் என்று உள்ளது. இது தொடர்பாகவும் நாம் அவரிடம் கேட்டிருந்தோம். அதற்கு ஜனாதிபதி தெரிவித்தார்.

"நாங்கள் 50 சதவீதம் நிறைவேற்றியுள்ளோம். உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்திவிட்டோம். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு சொற்ப காலங்கள் உள்ளது. ஆனால் நாம் மாகாண சபைத் தேர்தலை நடத்துவோம்" என்ற உறுதிமொழியை எமக்கு வழங்கினார். எப்போது மாகாண சபைத் தேர்தல் என்று சொல்லவில்லை.

மாகாணத்தில் இருந்து அதிகாரங்கள் பறித்தெடுக்கப்படக் கூடாது என்பது தொடர்பாகவும் பொறுப்புக்கூறல் தொடர்பாகவும் எமது மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பல்வேறு பிரச்சினைகள் தொடர்பிலும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு சென்றனர்.

ஜனாதிபதி அனைத்தையும் செவிமடுத்தார். சுமார் ஒன்றரை மணிநேரம் எம்முடன் கலந்துரையாடினார். முக்கியமான பல விடயங்கள் இந்த சந்திப்பில் பேசப்பட்டுள்ளன.

தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதான கட்சி என்ற ரீதியில் தொடர்ந்து எம்முடன் இணைந்து இந்த நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் நாம் ஜனாதிபதியுடன் பேசியுள்ளோம். அதற்கு ஜனாதிபதி அவதானம் செலுத்துவதாகவும் எம்மிடம் தெரிவித்தார்.

திருகோணமலை புத்தர் சிலை தொடர்பிலும் ஜனாதிபதிக்கு நாம் எடுத்துரைத்துள்ளோம். இதை வைத்து இனவாதத்தைத் தூண்டுவதற்கு அனைத்துப் பகுதிகளிலும் பலர் உள்ளனர். கடந்த இரு தினங்களிலும் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பௌத்த தேரர்கள் குறித்த பகுதிக்கு சென்று பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கின்றனர். இவ்வாறான செயற்பாட்டுக்கு இடம்கொடுக்கக் கூடாதென்பது எங்களது திடமான கருத்து. ஆனால் அதேவேளையில், தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் விகாரைகளை அமைத்து ஆதிக்கத்தை காட்டுவது இனங்களுக்கிடையில் எவ்விதமான நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தாது என்பதை நாம் ஜனாதிபதிக்கு எடுத்துச் சொல்லியுள்ளோம்." - என்றார்.

# நீரிழிவு தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு பேரணி






சர்வதேச நீரிழிவு தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு பேரணியும் விழிப்புணர்வு நிகழ்வும் இன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டிலும் மட்டக்களப்பு லயன் கழகத்தின் அனுசரணையுடனும் இந்த நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இதனை முன்னிட்டு மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து விழிப்புணர்வு ஊர்வலம் ஆரம்பமாகி மட்டக்களப்பு காந்திபூங்கா வரையில் ஊர்வலம் சென்றது.

இதன்போது நீரிழிவு நோயின் தாக்கம் அதற்கான சிகிச்சை முறைகள் மற்றும் அதன் தாக்கம் தொடர்பிலான துண்டுப்பிரசுரம் ஒன்றும் விநியோகிக்கப்பட்டது.

ஊர்வலம் காந்தி பூங்காவினை சென்றடைந்ததும் அங்கு நீரிழிவு நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வானது மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் டாக்டர் முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்றதுடன் இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தொற்றா நோய் பிரிவின் பொறுப்பதிகாரி டாக்டர் எம்.ருதேசன், மண்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் உதயகுமார், லயன்ஸ் கழக மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கே.லோகேஸ்வரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது நீரிழிவு தொடர்பான சோதனை நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# சர்ச்சைக்குரிய துறையூர் மீன் சந்தை தொடர்பில் சட்ட நடவடிக்கை

துறையூர் மீன்சந்தை வரி அறவீடு, விவகாரம் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைக்கு செல்லவுள்ளதாக தவிசாளர் சி.அசோக்குமார் அறிவித்துள்ளார்.

வேலணை பிரதேச சபையினால் விட்டுக்கொடுப்பு, நெகிழ்வுப் போக்குடன் பல தடவைகள் சந்தர்ப்பம் வழங்கப்பட்டும் துறையூர் மீன்சந்தை வரி அறவீடு, விவகாரத்துக்கு அப்பகுதி துறைசார் தரப்பினரோ கடற்றொழில் சங்கங்களோ ஒத்துழைப்போ சாதகமான போக்கையோ வழங்காமையினால் குறித்த சந்தை தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைக்கு செல்லவுள்ளதாக அறிவித்துள்ளார். வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு இன்று காலை 10 மணிக்கு தவிசாளர் சிவலிங்கம் அசோக்குமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது குறித்த சந்தை 2026 ஆம் ஆண்டுக்கான பகிரங்க கேள்வி கோரலில் உள்வாங்கப்படமை தொடர்பில் உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதனால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இதற்கு பதிலளிக்கையிலேயே தவிசாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

துறையூர் மீன் சந்தை, குத்தகை மற்றும் வரி அறவீடு குறித்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையால் நீண்ட காலமாக சர்ச்சையுடன் கூடிய பேசுபொருளாக இருந்து வருகின்றது.

குறிப்பாக குறித்த விடயம் தொடர்பில் பிரதேச சபை வரி அறவீடு செய்ய வலியுறுத்தியதுடன் அது தொடர்பிலான சபையின் சுற்றுநிருபங்களையும் குறித்த தரப்பினருக்கு காண்பித்திருந்தது. ஆனால் குறித்த சந்தை இறங்குதுறை என்றும் தாம் வரி அறவீட்டை எதிர்ப்பதாகவும், தமது அறுவடை மீன்களை மொத்தமாக விற்க இலவசமாக அனுமதிக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் வேலணையின் தீரா பிரச்சினையாக உருவெடுத்துள்ள குறித்த துறையூர் சந்தையின் தீர்வுக்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு ஆலோசனை கடிதம் அனுப்பியிருந்தோம். அவர்கள் பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் பிரதேச சபையையே நடவடிக்கை எடுக்குமாறு எமக்கு பதில் கடிதம் அனுபியுள்ளனர்.

இந்நிலையில் மீண்டும் அவர்களுக்கு இன்று வரை (19) ஒரு சந்தர்ப்பம் வழங்கியிருந்தேன். அதையும் அவர்கள் உதாசீனம் செய்துள்ளனர்.

இதன் அடிப்படையில் குறித்த சந்தை தொடர்பில் எத்தகைய சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமோ அது தொடர்பில் விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு பிரதேச சபையின் இழக்கப்படும் வருமானம் மீள ஈட்டப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# சமூகத்தில் போதைப்பொருள்...

இருந்தும் போதைப்பொருள் பாவனையை இல்லாது ஒழிப்பதற்கு சட்டத்தோடு சமூகத்தின் ஒத்துழைப்பும் அவசியமாகக் காணப்படுகிறது.

போதைப்பொருள் பிரச்சினைக்கு தீர்வு காண பல நடவடிக்கைகள் அவசியமாக காணப்படுகின்றன. கல்வி மூலமாக விழிப்புணர்வாக பாடசாலை முதல் பல்கலை வரை போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் அபாயங்கள் பற்றிய படங்களை சேர்த்தல், பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுடன் கலந்துரையாடல் செய்தல் மற்றும்

பிள்ளைகளின் நண்பர்கள் மற்றும் அவர்களின் பழக்க வழக்கங்களை கவனிக்க வேண்டும், மத அமைப்புகள் சமூக அமைப்புக்கள் ஊடகங்கள் ஆகியவை இணைந்து விழிப்புணர்வு பிரச்சாரங்களை மேற்கொள்ளுதல் வேண்டும், போதைப்பொருள் பாவனையாளர்களை தண்டனைகளுக்கு மட்டும் உட்படுத்தாது அவர்களை சமூகத்திற்கு ஏற்றவர்களாக மீள உருவாக்க மையங்களில் அவர்களுக்கான சிகிச்சைகளை வழங்கி சிறந்த நபர்களாக மாற்றுதல் வேண்டும், சமூக ஊடகங்களில் அதாவது திரைப்படங்கள் மற்றும் பாடல்களில் போதை பொருளை ஒரு நல்ல விடயமாக பாவனை செய்யாது அதனால் ஏற்படும் தீய விளைவுகள் பற்றி விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும், அத்தோடு இளைஞர்களை விளையாட்டுகளை தொழில் பயிற்சிகள் போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் போதை பொருள் பாவனை குறைக்க முடியும்.

போதைப்பொருள் பாவனை என்பது தற்போது தனி நபரின் பிரச்சினையாக மட்டும் அல்லாது ஒரு சமூக நோயாக மாறி உள்ளது இது சமூகத்தின் நெறிமுறைகள் ஒழுக்கம் கலாச்சாரம் மற்றும் மனித உறவுகளை பாழாக்கும் ஒரு விடயமாக காணப்படுகிறது. இது எதிர்கால தலைமுறையினதும் தற்கால சமூகத்தினரும் ஆரோக்கியத்தையும் நாட்டின் முன்னேற்றத்தையும் அச்சுறுத்தி வரும் ஒரு விடயமாக தொழிற்படுகிறது

எனவே சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனி நபரும் அரசாங்கமும் ஊடக நிறுவனங்கள் இணைந்து இப்பிரச்சினைக்கு எதிராக போராடி போதையில்லா சமூகத்தை உருவாக்கி ஆரோக்கியமான நாட்டை கட்டியெழுப்ப வேண்டும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.11.2025 வெளியிடப்பெற்றது.